Original Article
ISSN (Online): 2582-7472

ShodhKosh: Journal of Visual and Performing Arts
January-June 2025 6(1), 102–105

# THE TAMILS' EARTHEN OCCUPATIONS AS SHOWN BY THE VENPAMALAI

# ள் புறப்பொருள் வெண்பாமாலை காட்டும் தமிழனின் மண்ணுறு தொழில்கள்

J. Arulmarcia [1]

[1] PhD Researcher, National College, Tiruchirappalli, India

**DOI**
10.29121/shodhkosh.v6.i1.2025.5475

**Funding:** This research received no specific grant from any funding agency in the public, commercial, or not-for-profit sectors.

**Copyright:** © 2025 The Author(s). This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

With the license CC-BY, authors retain the copyright, allowing anyone to download, reuse, re-print, modify, distribute, and/or copy their contribution. The work must be properly attributed to its author.

OPEN ACCESS

## ABSTRACT

**English:** It was considered a tradition for the Venpamalai to mention the king, leader, or patrons who ruled the Tamil land and to sing about their valor, victory, gifts, and indestructibility. The Venpamalai says that conquering the country, attracting the gods, and rescuing them are valor and victory. Apart from that, they were happy to think about the victories they achieved in the soil and in soil-related games. All these victories highlight the soil and the earth-related occupations. It also explains how all the earth-related occupations did not affect the natural environment in any way and how harmless activities were carried out.

**Hindi:** தமிழ் மண்ணை ஆண்ட மன்னனையோ, தலைவனையோ, புரவலர்களையோ குறிப்பிடுவதுடன் அவர்களின் வீரம், வெற்றி, கொடை, நிலையாமை இவற்றைக் குறிப்பிட்டு பாடுவதை புறப்பொருள் மரபாக எண்ணப்பட்டது. நாட்டினைக் கைப்பற்றுவதையும் ஆநிரைகளை கவருவதையும், மீட்பதையும் வீரம், வெற்றி என்பதாக புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது. அதனோடல்லாமல் மண்ணிலும், மண் தொடர்பான விளையாட்டுகளிலும் பெற்ற வெற்றிகளையும் எண்ணி மகிழ்ந்திருந்தனர். இவ்வெற்றிகள் அனைத்தும் மண்ணையும், மண் சார்ந்த தொழில்களையும் சிறப்பித்து கூறுகிறது. மண் சார்ந்த தொழில்கள் அனைத்தும், இயற்கைச் சூழலை எவ்விதமும் பாதிக்காத வண்ணமும், ஊறு விளைவிக்காத செயல்பாடுகள் உருவான விதங்களைப் பற்றியும் தெளிவுறுத்துகிறது.

ஆய்வுத் தலைப்பு

போர், வெற்றி, வீரம் இவற்றினைக் குறிப்பிடும் புறப்பொருள் வெண்பா மாலையில் ஒழிபு பகுதியில் கூறப்பெறும் பதினெட்டு வகையான வெற்றிகள் எவ்வாறு மண் சார்ந்து காணப்பெறுகின்றது என்பதனையும், இன்றைய சூழலில் உழவுத் தொழிலுக்கான தேவைகளையும் பயன்பாடுகளையும் அடையாளம் காணும் வகையில் 'புறப்பொருள் வெண்பா மாலை காட்டும் தமிழனின் மண்ணுறு தொழில்கள்" என்று ஆய்வுத் தலைப்பு அமைந்துள்ளது.

ஆய்வின் நோக்கம்

மண்ணுறு தொழில் நிறைந்த தமிழகத்தை புறப்பொருள் வெண்பா மாலையின் வாயிலாக இன்றைய சூழலுக்கு தகவமைத்துக் கொள்ள எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**ஆய்வின் கருதுகோள்**

மண்ணை மலடாக்கும் பல்வேறு தொழிற்சாலை கழிவுகளிலிருந்தும், தரமான உழவுத்தொழினைக் கையாண்டு தமிழ் மண்ணை மீண்டும் உரமாக மாற்றும் வழிகளைப் பற்றி தெரிந்துணர்வதே இக்கட்டுரையின் கருதுகோளாக அமைகின்றது.

**ஆய்வு எல்லை**

புறப்பொருள் வெண்பா மாலையில் ஒழிபு பகுதியில் எடுத்தாண்டுள்ள வெற்றியின் குறியீடுகளை மட்டுமே ஆராய்வதே இக்கட்டுரையின் எல்லையாக அமைகிறது.

**ஆய்வு அணுகுமுறை**

புறப்பொருள் வெண்பாமாலையின் ஒழிபு பகுதியில் கூறப்பெறும் செய்திகளை விளக்கிக் கூறுவதால் இவ்வாய்வு விளக்கமுறை ஆய்வாக அமைகின்றது.

**ஆய்வின் அமைப்பு**

ஆய்வின் முன்னுரை, முடிவுரை நீங்கலாக இரண்டு பகுதிகளாக கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை**

இன்றைய சூழலில் அறிவியல் வளர்ச்சியால் கழிவுகள் அதிகரித்து, நிலமும், நீரும், காற்றும் மாசடைந்து, மனிதனைப் பாதிப்புக்குள்ளாகின்றன. அதனை விடுத்து, வரும் தலைமுறையினர் வாழத் தகுதியான பூமியாக மாற்றுவதற்கு நம்முடைய மண் சார்ந்த தொழிலினை மீட்டுருவாக்கம் செய்வதிலிருந்து புத்துலகம் அடைவதற்கான நன்மைகளை விளக்குவதாக அமைகின்றது.

ஜே.அருள்மார்சியா

முனைவர் பட்ட ஆய்வாளர்

தேசியக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி

அலைபேசி : 8072212944

புறப்பொருள் வெண்பாமாலையில் காணலாகும் தமிழனின் மண்ணுறு தொழில்கள்

மனிதன் உணவு, உடை, உறைவிடம் என்ற அடிப்படைத் தேவைகள் மூன்றோடு வாழ்ந்த வரை வாழ்க்கை வரமாக இருந்தது. ஆனால் அடிப்படைத் தேவைகளுக்குள், அறிவியல் பெருக்கத்தால் ஏற்பட்ட ஆடம்பரத்தை புகுத்திய போது பெரும் போர்களுக்கும் பேரழிவுகளுக்கும் தன்னை அறியாமலே தகுதிபடுத்திக் கொண்டான். இதில் விளைந்த வினையே இன்றைய உலகம் அடுத்த தலைமுறையினர் வாழத் தகுதியில்லாத பூமியாக மாறியுள்ளது. இதனால் மனிதகுல வளர்ச்சிக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம் மண்ணுறு தொழிலிலிருந்து மனிதன் விலகியதே. இவ்வுலகை மீட்டெடுக்கும் முயற்சியில் முதன்மையானதும், உறுதியானதும், முடிவானதும் தமிழன் விதைத்த மண்ணுறு தொழிலே. அத்தகு மண்ணுறு தொழில் நிறைந்த தமிழகத்தைப் புறப்பொருள் வெண்பா மாலையின் வாயிலாகப் படம் பிடித்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

தமிழனின் மண்ணுறு தொழிற் சிந்தனை

பழந்தமிழன் இயற்கையோடு இயைந்தே வாழ்ந்தான் என்பதற்கு ஐவகை நிலப்பாகுபாடே சான்றாக அமைகின்றது. நிலத்திற்கேற்ப தன்னைத் தகவமைத்துக் கொண்டான். அதாவது நிலத்தின் தன்மைகளுக்கேற்ப தொழில் வகைகளைப் பிரித்துக் கொண்டான். குறிஞ்சி என்றாலே மலையும் மலைசார்ந்த இடமும் என்பது போல், தமிழ்த்திணை என்பதற்கு மண்ணும் மண்ணுறு

தொழிலும் என்றுரைப்பதில் வியப்பில்லை. தமிழனின் மண்ணுறு தொழில் என்பது மண்ணிற்கேற்ற தொழில் அதாவது விவசாயமே. விவசாயமும் விவசாயம் சார்ந்த தொழில்களையே மண்ணுறு தொழிலாகக் கொண்டு மாண்புற வாழ்ந்துள்ளான். விவசாயத்தின் மூலம் ஏற்படும் கழிவுகளும், தேக்கங்களும் மண்ணிற்கு உரமாகிவிடும். மண்ணுறு தொழில் நிலம், நீர், காற்று, ஆகியவற்றை மாசுபடுத்தி மலடாக்குவது இல்லை.

"புலி சேர்ந்து போகிய கல்அளை போல

ஈன்ற வயிறோ இதுவே

தோன்றுவதன் மாதோ போர்க்களத் தானே" 9

என்பது போல் தமிழன் வாழ்ந்த மண்தான் உள்ளது. ஆனால் அவனது சிந்தனை தொழிற்புரட்சி எனும் ஆயுதத்தால் அழிக்கப்பட்டுவிட்டது. ஏனெனில் மகிழுந்து தொழிற்சாலை, சலவை இயந்திரத் தொழிற்சாலை என பல்வேறு தொழில்கள் செய்யப்படுகின்றது. அவற்றின் கழிவுகளும், தேக்கங்களும் மண்ணிற்கு உரமாவது இல்லை. மாறாக மண்ணை மலடாக்குகின்றன.

புறப்பொருள் வெண்பா மாலையின் மண்ணுறு தொழில்கள்

"வாகையுள்

வாணிக வென்றியும் மல்ல வென்றியும்

நீணெறி உழவன் நிலனுழு வென்றியும்

இகல்புறி யெறொடு கோழியும் எதிர்வன்

தகருடன் யானைதணப்பில்வெம் புகொடு

சிவல்கிளி பூவை செழும்பரி தேர்யாழ்

இவர்தரு சூதிடை யாடல் பாடல்

பிடியென்கின்ற பெரும்பெயர் வென்றியொடு"

எனும் பாடல் வரிகள், போர்வெற்றி மட்டும் வெற்றியல்ல என்று கூறி வணிக வென்றி, மல்வென்றி, உழவன்வென்றி, ஏறுகொள் வென்றி, கோழிவென்றி, தகர்வென்றி, கிளிவென்றி, யானைவென்றி, பூழ் வென்றி, சிவல் வென்றி, பூவை வென்றி, தேர் வென்றி, குதிரை வென்றி, யாழ் வென்றி, சூது வென்றி, ஆடல் வென்றி, பாடல் வென்றி, பிடி வென்றி என்பதாக பதினெட்டு வகையான வென்றி அதாவது வெற்றிகளைக் குறிப்பிடுகிறது.

"பாலை படுமலை பண்ணி அதன்கூட்டம்

கோலஞ்செய் சீறியாழ் கொண்டபின் வேலைச்

சுவையெலாம் தோன்ற எழ்இயினாள் சூழ்ந்த

அவையெலாம் ஆக்கி குணங்கு"

என்னும் பாடல் வரிகள் யாழ் இசைத்தலிலே வெற்றி கொள்வதைச் சொல்லுகிறது. மேலும்,

"சொல்லுஞ் சுவட்டவர் சொல்லுக சொல்லுங்காற்

சொல்லும் பலவுள சொன்னபின் - வெல்லும்

நலம்வர நாடி நடுங்காது நூற்கண்

புலவரால் ஆய்ந்தமைத்த பூழ்"

என்னும் வரிகள் குறும்பூழ்ப் பறவையைப் போருக்கு விட்டுக் கொள்ளும் வெற்றியைக் கூறியது என்பதாக பலவகை வென்றிகளைக் குறிப்பிடுகிறது. இத்தகைய வெற்றிகளைக் காணும் போது பல போட்டிகள் நடத்தப்பட்டதை அறியலாம், அன்றே தமிழன் பல தொழில்களோடு, பொழுதுபோக்காக பல விளையாட்டுகளையும் விளையாடியுள்ளான். இதில் பல தொழிற்துறைகளையும், தொழிற்

சுழற்சிகளையும் கண்டுணர முடிகிறது. போட்டி என்று ஒன்று இருந்ததால் நல்லனவற்றை வாங்கவும், விற்கவுமான சந்தைக்களம் நாள்தோறும், வாரந்தோறும், மாதந்தோறும், ஆண்டுதோறும் நடைபெற்றிருக்கும். இதுவே சிறந்த தொழிற்சிந்தனையும், வாழ்வியலுமாகும். இதனால் தான் தமிழ்ச் சமூகம் இன்றளவும் நிலைத்துள்ளது. இதனை நாம் நாகரீகம் எனும் பெருநோயினால் நமது பழமைத்துவத்தை மண்ணில் புதைத்துவிட்டோம்.

இத்தகைய மண்ணுறு தொழிலை நாம் மீட்டுருவாக்கம் செய்தால், செவ்வாயில் நீரைத்தேடி அலைய வேண்டிய அவசியமில்லை. இயற்கையோடு இணைந்தாலே மனிதனும் மனித மரபுகளும் பாதுகாக்கப்பட்டு நாம் வாழும் பூமி நமக்குரியதாகவே நிலைக்கும் என்பதில் ஐயமில்லை.

**துணைநூற்பட்டியல்**

புறப்பொருள் வெண்பாமாலை - புலியூர் கேசிகன் பக்-328
புறப்பொருள் வெண்பாமாலை - புலியூர் கேசிகன் பக்-340
புறப்பொருள் வெண்பாமாலை - புலியூர் கேசிகன் பக்-341